මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව | செயலகம், கொழும்பு 01, இலங்கை. | The Secretariat, Colombo 01, Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011-2484500, 011-2484600, 011-2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2449823
වෙබ් අඩවිය / இணையதளம் / Website: www.treasury.gov.lk


මගේ අංකය / எனது இல / My No: CGO/ASM/Policy/Cir/ (VOL II)
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2022.09.09

**ஆதன முகாமைத்துவ சுற்றுநிருபம் இல.10/2022**

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
திணைக்களங்களின் தலைவர்கள்
அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகள்
அரச வங்கிகள் மற்றும் அரசுடமை கம்பனிகளின் தலைவர்கள்
அனைவருக்கும்

**அரசாங்கத்தின் நிதியல்லாத சொத்துக்கள் முகாமைத்துவம்**

**அரச துறை நிறுவனங்களில் குவிந்து கிடக்கும் கழிவுப் பொருட்களை அகற்றுதல்**

பொதுச் சொத்துக்கள் பாழாவதையும், அரச வருமான இழப்பை தடுப்பதற்கும் அரச துறை நிறுவனங்களில் நீண்ட காலமாக குவிந்து கிடக்கும் கழிவுப் பொருட்களை அகற்றும் பணியை துரிதப்படுத்துவதற்கு 2022 இடைக்கால வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளது. மேலும், கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவது ஆரோக்கியமான சூழலை உருவாக்கும் அதேவேளை, அவற்றுக்கான இடங்களை உற்பத்தித்திறனுடன் பயன்படுத்தவும் முடியும். எனவே, அத்தகைய கழிவுப் பொருட்களை அகற்றும் செயன்முறையை நிறைவு செய்வதை உறுதி செய்வதற்காக சனாதிபதியின் செயலாளரினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

02. அதன்படி, கீழே கொடுக்கப்பட்டவாறு தேவையான நடவடிக்கைகளை எடுப்பது அனைத்து அரச துறை நிறுவனங்களின் தலைவர்களின் கடமையாகும் என்று வலியுறுத்தப்படுகிறது.

(அ) பிரிவு 02(இ) II, III மற்றும் கீழுள்ள IV இல் ஒவ்வொரு நிறுவனத்திலும் கொடுக்கப்பட்டுள்ள கழிவுப் பொருட்களின் பெறுமதியை மதிப்பிட சிரேட்ட பதவியணி அலுவலரொருவர், தொழில்நுட்ப அறிவு கொண்ட அலுவலரொருவர் மற்றும் மற்றொரு அரச துறை நிறுவனத்தைச் சேர்ந்த அலுவலரொருவர் ஆகியோரைக் கொண்ட மூன்று உறுப்பினர் குழுவை நியமித்தல் வேண்டும்.

(ஆ) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பின்னிணைப்பு I இன்படி, 2022 செப்டம்பர் 15 அன்றுள்ளவாறு, பிரிவு 02 (இ) II, III மற்றும் கீழுள்ள IV இல் கொடுக்கப்பட்டுள்ள கழிவு பொருட்களுடன் தொடர்புடைய தகவலை 2022 ஒக்டோபர் 15 ஆந் திகதிக்கு முன்னர் கொம்ப்றோளர் ஜெனரல் அலுவலகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(இ) கீழே கொடுக்கப்பட்டுள்ள நடைமுறையைப் பின்பற்றி கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்:

| இல. | கழிவுப் பொருள் வகை | எடுக்கவேண்டிய நடவடிக்கை |
|---|---|---|
| I. | வாகனங்கள் (பதிவுசெய்யப்பட்டது) | 2020 அக்டோபர் 02 ஆந் திகதிய ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 05/2020 இல் கொடுக்கப்பட்டுள்ள அறிவுருத்தல்களைப் பார்க்கவும். |
| II. | இரும்பு அல்லது உருக்கு | நி.தி. குறிப்பு 773(1) இன் விதிகளின்படி கழிவுப் பொருட்களை அகற்றல். |
| III. | பித்தளை, செம்பு அலுமினியம், வார்ப்பிரும்பு அல்லது பிற உலோகப் பொருட்கள் | நி.தி. குறிப்பு 773(2) இன் விதிகளின்படி, கழிவுப் பொருட்களை அரசாங்க தொழிற்சாலையிடம் ஒப்படைத்தல். |
| IV. | பலகை, பிளாஸ்திரிக் மற்றும் பிற | நி.தி. குறிப்பு 772 இன் விதிகளின்படி கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்தல். |

(ஈ) மேலே குறிப்பிட்ட பிரிவு 02(இ) இல் கொடுக்கப்பட்டுள்ள கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கான முன்னேற்றத்தை கீழே குறிப்பிட்டுள்ளபடி, 2022 நவம்பர் 30 இற்கு முன்னர், கொம்ப்றோளர் ஜெனரல் அலுவலகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

| இல. | கழிவுப் பொருள் வகை | அறிவிக்கப்பட வேண்டிய முன்னேற்றம் |
|---|---|---|
| I. | மேலே 02(இ) (I) பிரிவின் கீழ் விவரிக்கப்பட்டுள்ள கழிவுப் பொருட்கள் | 2020 அக்டோபர் 02 ஆந் திகதிய ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 05/2020 இல் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பார்க்கவும். |
| II. | மேலே 02(இ) (II), (III) மற்றும் (IV) பிரிவின் கீழ் விவரிக்கப்பட்ட கழிவுப் பொருட்கள் | இத்துடன் இனைக்கப்பட்ட பின்னிணைப்பு II இன் படி. |

03. கழிவுப் பொருட்களை அகற்றுவதன் மூலம் கிடைக்கும் வருமானம் பின்வருமாறு கணக்கிடப்படல் வேண்டும்:

(அ) திரட்டு நிதியத்திற்கு வரவு வைப்பதற்காக, நிறுவனங்களின் வாகன கழிவுப் பொருட்களை அகற்றுவதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை வரவு வைப்பதற்கு, வரவு செலவுத் திட்டத் தலைப்பு 20.06.02.01 வருமானக் குறியீட்டிற்கும், மற்றும் பிற கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதன் மூலம் வருமானக் குறியீடு 20.06.02.02 இற்கும் வரவுவைத்தல் வேண்டும்.

(ஆ) வரவுசெலவுத் தலைப்பில்லாத ஆனால் நிரல் அமைச்சொன்றின் ஊடாக திறைசேரி நிதியினைப் பெறுகின்ற நிறுவனங்களின் அத்தகைய வருமானத்தை, மேலுள்ள பிரிவு 03(அ) இல் கொடுக்கப்பட்டுள்ள தொடர்புடைய வருமானக் குறியீட்டின் கீழ், நிரல் அமைச்சினூடாக திரட்டு நிதியத்துக்கு வரவு வைத்தல் வேண்டும்.

(இ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் அத்தகைய வருமானத்தை அவர்களின் சொந்த நிதியில் வரவு வைத்தல் வேண்டும்.

04. விசாரணை அல்லது நீதிமன்ற உத்தரவின் கீழுள்ள கழிவுப் பொருட்கள் தொடர்பாக, 2022 செப்டம்பர் 15 ஆம் திகதியிலுள்ள தகவல்களை, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பின்னிணைப்பு I இன்படி, 2022 அக்டோபர் 15 இற்கு முன், தனித்தனியாக கொம்ப்றோளர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. மேலும், இச்சுற்றறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள், நிறுவனத்தைக் கலைக்கின்ற செயற்பாட்டிற்காக அல்லது கலைப்புச் செயன்முறைக்காக அடையாளம் காணப்பட்ட அரச துறை நிறுவனங்களுக்குப் பொருந்தாது. எவ்வாறாயினும், 2022 செப்டம்பர் 15 இலுள்ள தொடர்புடைய கழிவுப் பொருட்கள் பற்றிய தகவல்களை, 2022 அக்டோபர் 15 க்கு முன்னர், இணைக்கப்பட்டுள்ள பின்னிணைப்பு I இன்படி, தனித்தனியாக கொம்ப்றோளர் ஜெனரல் அலுவலகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

06. உங்கள் நிறுவனத்தில் கழிவுப் பொருட்கள் ஏதும் இல்லை என்றால், "எதுவுமில்லை" (Nil) என்ற அறிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

07. இத்துடன் பின்னிணைப்பு I மற்றும் பின்னிணைப்பு II இல் கொடுக்கப்பட்டுள்ள முறையாக நிரப்பப்பட்ட படிவங்கள், மேலே குறிப்பிடப்பட்ட தொடர்புடைய முடிவுத் திகதிக்கு முன்னர், cgo@mo.treasury.gov.lk என்ற மின்னஞ்சல் மூலம் கொம்ப்றோளர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

**ஒப்பம்/கே.எம். மஹிந்த சிறிவர்தன**
**திறைசேரி செயலாளர்**

பிரதிகள்:

1. திறைசேரியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்